In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 163/2023 Prosecution witness P.W.11

Name: Murugesan Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. Other Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல் ஆர்.எம்.காலனியில் வசிக்கிறேன். நான் சிவில் என்ஜினியராக சென்னையில் வேலை பார்த்து வருகிறேன். 8.11.2023 ம் தேதி காவல்துறை கண்காணிப்பாளர் என்னை அழைத்து கொலை சம்மந்தமாக என் பேரில் உள்ள கார் ஈடுபட்டுள்ளதாக என்னிடம் தெரிவித்து என்னை விசாரித்தார். அந்த கார் எண்.TN-57-AB-4655 ஷிப்ட் சிவப்பு கலர் கார் எனக்குச் சொந்தமானது. என்னுடைய காரை நான் மோகன்சுந்தரராஜ் என்பவருக்கு 14.01.2022 ம் தேதி நான் விற்பனை செய்துவிட்டேன் என்ற விவரத்தை ஆய்வாளரிடம் தெரிவித்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

புதிய காரோ பழைய காரோ வாங்கும்போது பெயர் மாற்றம் செய்வதற்கு மாறுதல் விண்ணப்பம் பழைய உரிமையாளரிடம் வாங்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை நான் வாங்கி என் பெயருக்கு பதிவு சான்று மாற்றம் செய்துவிட்டேன். மேற்படி வாகனம் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு பதிவுச்சான்றிதழோ, காப்பீடு சான்றிதழோ ஆகியவற்றை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அந்த வாகனம் எனக்கு

பாத்தியப்பட்டது என எந்தவித கடிதமும் டிஎஸ்பி யிடம் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனம் எனக்குச் சொந்தமானது இல்லை என்றும் காவல்துறையினருக்கு பயந்துகொண்டு அவர்கள் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.28 17:05:58 +0530

Principal District Judge,
Dindigul.